# World Socialist Web Site www.wsws.org

**Comité international de la Quatrième Internationale (CIQI)**

# Rassemblement à la mémoire de Raveenthiranathan Senthil Ravee (1969-2007)

### Militant trotskyste luttant pour l'internationalisme socialiste



Le Comité international de la Quatrième Internationale (CIQI) et le *World Socialist Web Site*(http://www.wsws.org/francais/) invitent les travailleurs, les étudiants et les jeunes à assister au rassemblement à la mémoire de Raveenthiranathan Senthil Ravee qui se tiendra à Paris le dimanche 15 avril 2007.

Le camarade Senthil était membre du CIQI, mouvement trotskyste international. Il a perdu la vie dans un accident de voiture aux premières heures du 28 février sur l'autoroute en direction de Londres tandis qu'il rentrait d'une visite à Paris où il avait tenté d'obtenir pour sa sœur le statut de réfugié.

Né le 12 octobre 1969 à Jaffna au Sri Lanka, Senthil appartenait à une génération qui a payé le prix fort pour la trahison du Parti Lanka Sama Samaja (LSSP) autrefois trotskyste, lorsque ce dernier rejoignit le gouvernement capitaliste du Parti sri lankais de la liberté en 1964. Il en résulta que le LSSP apporta son soutien à une constitution institutionnalisant le racisme anti-tamoul, et la conviction de nombreux Tamouls que leur libération de l'oppression nationale serait le résultat de la lutte pour le socialisme fut détruite, ce qui facilita le développement d'organisations nationalistes petites-bourgeoises.

C'est dans ce climat politique que Senthil a grandi et s'est engagé dans la lutte nationale dès l'âge de 15 ans. Il a été forcé de s'exiler face à la répression combinée de l'armée cingalaise et indienne à la fin des années 1980, une situation aggravée par les luttes de factions entre les Tigres de libération de l'Eelam tamoul (LTTE) et d'autres groupes nationalistes.

C'est en France en 1991 que Senthil et d'autres de la communauté d'exilés tamouls, sont entrés en contact pour la première fois avec des sympathisants du CIQI et ont compris la signification non seulement de la trahison du LSSP mais de la lutte des trotskystes du Sri Lanka pour défendre la perspective du socialisme.

Il est devenu un internationaliste engagé, travaillant sans relâche pour construire l'influence du CIQI parmi les travailleurs tamouls et français. Lorsque la section en langue tamoule du *World Socialist Web Site* fut lancée en 2000, il l'accueillit à bras ouverts comme un instrument décisif à la construction du CIQI dans le sous-continent indien.

Il est approprié que ce rassemblement à la mémoire du camarade Senthil se tienne à Paris au plus fort de la campagne électorale pour la présidentielle. Il était aux antipodes de la vision nationaliste de la gauche française, du Parti socialiste aux divers groupes qui se disent trotskystes et s'alignent derrière Ségolène Royal et dont le rôle politique ne diffère pas fondamentalement de celui du LSSP.

Prendront la parole à ce rassemblement à la mémoire du camarade Senthil, Wije Dias du Parti de l'égalité socialiste (PES) du Sri Lanka, Chris Marsden du PES britannique et Peter Schwarz du PES allemand.

L'examen des leçons historiques des évènements au Sri Lanka contribuera à développer une perspective socialiste pour la classe ouvrière française et européenne.




## le dimanche 15 avril 2007

## à 15h

## FIAP JEAN MONNET

**30 rue Cabanis**
**75014 Paris**

**Métro : Glacière, ligne 6**
(Sortir à la station Glacière et remonter le boulevard Saint-Jacques juqu'à la rue de la Santé)

# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு

# ரவீந்திரநாதன் செந்தில்ரவி (1969-2007) நினைவுக் கூட்டம்

# சோசலிச சர்வதேசிய போராளி

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வலைத் தளமும் (http://www.wsws.org/tamil/) ரவீந்திரநாதன் செந்தில்ரவியை கௌரவிக்க பாரிசில் ஞாயிற்று கிழமை, ஏப்ரல் 15 நடைபெறவிருக்கும் நினைவுக் கூட்டத்திற்கு தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரை அழைக்கிறது.

உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தமிழ் அங்கத்தவரான தோழர் செந்தில் தனது தங்கைக்கான அகதி அந்தஸ்தினை உத்திரவாதம் செய்யவதற்காக பாரிஸ் வந்து திரும்பிக் கொண்டிருக்கும்பொழுது லண்டன் செல்லும் பெருஞ்சாலையில் பெப்ரவரி 28 அதிகாலையில் ஒரு கார் விபத்தில் அகால மரணமானார்.

இலங்கை, யாழ்ப்பாணத்தில் 1969 அக்டோபரில் பிறந்த செந்தில், ஒரு காலத்தில் ட்ரொட்ஸ்கிச கட்சியாக இருந்த லங்கா சமசமாஜக் கட்சி, 1964ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் இணைந்த காட்டிக்கொடுப்புக்கான அதிக விலையை கொடுத்த ஒரு தலைமுறையை சேர்ந்தவராவார். தமிழ் விரோத இனவாதத்தை ஸ்தாபனமயப்படுத்திய ஒரு அரசியலமைப்பிற்கு லங்கா சமசமாஜக் கட்சி வழங்கிய ஆதரவின் விளைவாக, சோசலிசத்திற்கான போராட்டத்தின் பெறுபேறாகத்தான் தேசிய ஒ டுக்குமுறையிலிருந்து தங்களின் விடுதலை கிடைக்கும் என்ற பல தமிழ்மக்களின் நம்பிக்கை அழிக்கப்பட்டதுடன், குட்டிமுதலாளித்துவ தேசியவாத அமைப்புக்களின் வளர்ச்சிக்கும் வகைசெய்தது.

இந்த அரசியற்சூழலில் பக்குவமடைந்து வளர்ந்த செந்தில் தனது 15ம் வயதிலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினார். 1980களின் முடிவில் சிங்கள மற்றும் இந்திய இராணுவத்தின் ஒ டுக்குமுறையின் விளைவாக அவர் புலம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டார் - அந்நிலைமையானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய தேசியவாத குழுக்களுக்கும் இடையிலான கன்னைவாத சண்டைகளால் மோசமடைந்திருந்தது.

செந்தில், 1991ல் பிரான்சில் தமிழ் புலம்பெயர்ந்தோர் சமுதாயத்தில் உள்ள ஏனையோருடன் சேர்ந்து, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஆதரவாளர்களுடன் முதல் தடவையாக தொடர்பு கொண்டார் மற்றும் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக்கொடுப்பின் முக்கியத்துவத்தை மட்டுமல்லாமல் சோசலிச முன்னோக்கினை பாதுகாக்கும் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் போராட்டத்தையும் பற்றி அறிய வந்தார்.

அவர் பிரெஞ்சு மற்றும் தமிழ் தொழிலாளர்கள் மத்தியில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் செல்வாக்கை கட்டியமைப்பதற்கு தொடர்ச்சியாக வேலை செய்ய அர்ப்பணித்துக்கொண்ட ஒரு சர்வதேசியவாதியாக ஆனார். 2000ம் ஆண்டில் உலக சோசலிச வலைத் தளத்தின் தமிழ் மொழி பகுதியை ஆரம்பித்தபோது, அவர் இந்திய துணைக் கண்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கட் டுவதில் ஒரு தீர்க்கமான கருவியாக இதனை இறுகப்பற்றிக் கொண்டார்.

பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தல் பிரச்சார உச்சக் கட்டத்தில் பாரிசில் தோழர் செந்திலின் நினைவுக் கூட்டம் நடைபெறவிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். செகோலென் ரோயாலின் பின்னே அணிதிரண்டிருக்கும் சோசலிசக் கட்சி முதல் லங்கா சமசமாஜக் கட்சியின் பாத்திரத்திலிருந்து அடிப்படையில் தம் அரசியற் பாத்திரம் வேறுபடாத ட்ரொட்ஸ்கிஸ்டுகள் என கூறிக்கொள்ளும் பல்வேறு குழுக்கள் வரையிலான பிரெஞ்சு இடதின் தேசியவாத கண்ணோட்டத்திற்கு முற்றிலும் எதிர்ப்பினை செந்தில் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

நினைவுக் கூட்டத்தில் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் விஜே டயஸ், பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சியின் கிறிஸ் மார்ஸ்டன் மற்றும் ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியின் பீற்றர் சுவார்ட்ஸ் ஆகியோர் உரையாற்ற இருக்கின்றனர்.

இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளின் வரலாற்று படிப்பினைகளை ஆய்வு செய்வதன் மூலம், அது பிரெஞ்சு மற்றும் ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்திற்கான ஒரு சோசலிச முன்னோக்கை மேலும் வளர்த்தெ டுக்கும்.

**ஞாயிறு, ஏப்ரல் 15, 2007**
**பிற்பகல், 15h**
**FIAP JEAN MONNET**
**30 rue Cabanis**
**75014 Paris**
**Métro : Glacière, ligne 6**

**நினைவுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துபவர்கள் :**

**விஜே டயஸ்** (இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி)

**கிறிஸ் மார்ஸ்டன்** (பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சி)

**பீற்றர் சுவார்ட்ஸ்** (ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி)